# உங்கள் சுகாதாரப் பராமரிப்புக்குக் கூடுதல் அரசாங்க உதவி

## எல்லாருக்கும்

### வெளிநோயாளிப் பராமரிப்புக்குக் கூடுதல் உதவி

- குறைந்த மற்றும் நடுத்தர வருமானப் பிரிவினர் நிபுணத்துவ வெளிநோயாளி மருத்துவகங்களில் (SOCs) பெறும் சேவைகளுக்கு மேலும் அதிக கட்டணக் கழிவுகளைப் பெறுவர் – 70% வரை (செப்டம்பர் 2014)
- மேலும் 13 மருந்துகளுக்குக் கட்டணக் கழிவு வழங்கப்படும் (ஏப்ரல் 2014)
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானப் பிரிவினர் பலதுறை மருத்துவகங்கள் (polyclinics) மற்றும் நிபுணத்துவ வெளிநோயாளி மருத்துவகங்களில் (SOCs) மருந்துகளுக்கு மேலும் அதிக கட்டணக் கழிவுகளைப் பெறுவர் (ஜனவரி 2015)

### மெடிசேவ் கணக்கில் பணம் நிரப்பப்படும்

- 5 ஆண்டு காலத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் $200 வரை நிரப்பப்படும் – 1959-ல் மற்றும் அதற்கும் முன்னதாகப் பிறந்த முன்னோடி அல்லாதவர்களுக்கு (ஆகஸ்ட் 2014)

### அதிகரிக்கப்பட்ட மெடிசேவ் பயன்பாடு

- வெளிநோயாளி மருத்துவக் கட்டணங்களுக்கு மெடிசேவ் கணக்கை மேலும் நீக்குப்போக்கான முறையில் பயன்படுத்த முடியும்
- வெளிநோயாளி ஊடுகதிர்ப்படம் (scan) எடுக்க மெடிசேவ் கணக்கிலிருந்து ஆண்டுக்கு $300 வரை பயன்படுத்த முடியும்

### மெடிஷீல்டு லைஃப் சந்தாக் கட்டணங்களுக்குக் கழிவுகள்

- குறைந்த மற்றும் நடுத்தர வருமானச் சிங்கப்பூரர்களுக்கு வழங்கப்படும் (2015-ன் பிற்பகுதி)

## உங்கள் குடும்பத்தில் உள்ள முன்னோடிகளுக்கு மேலும் கூடுதல் அனுகூலங்கள்

### வெளிநோயாளிப் பராமரிப்புக்குக் கூடுதல் உதவி

- பலதுறை மருத்துவகங்கள் (polyclinics) மற்றும் நிபுணத்துவ வெளிநோயாளி மருத்துவகங்களில் (SOCs) கழிவு வழங்கப்பட்ட சிகிச்சைகளுக்கு மேலும் 50% கழிவு வழங்கப்படும் (செப்டம்பர் 2014)
- முன்னோடித் தலைமுறை அட்டை – சமூக சுகாதார உதவித் திட்டத்தில் (சாஸ்-CHAS) பங்குபெறும் தனியார் மருந்தகங்கள் மற்றும் பல் மருந்தகங்களில் எல்லா முன்னோடித் தலைமுறையினருக்கும் சிறப்புக் கட்டணச் சலுகைகள் வழங்கப்படும் (செப்டம்பர் 2014)
  - பொதுவான நோய்களுக்கும் குறிப்பிட்ட நாள்பட்ட நோய்களுக்கும் கூடுதல் நிதி உதவி
  - பல் சிகிச்சைகளுக்கு மேம்படுத்தப்பட்ட சலுகைகள்
  - சுகாதார மேம்பாட்டு வாரியத்தின் (HPB) கடிதம் உள்ளவர்களுக்கு இலவச உடல்நலப் பரிசோதனை மற்றும் கட்டணச் சலுகையுடன் மருத்துவ ஆலோசனை
- உடற்குறையுள்ளோருக்கு உதவியாக ஆண்டுக்கு $1,200 ரொக்கம் வழங்கப்படும் (செப்டம்பர் 2014)

### மெடிசேவ் கணக்கில் பணம் நிரப்பப்படும்

- வாழ்நாள் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் $200 - $800 நிரப்பப்படும் (ஜூலை 2014)

### மெடிசேவ் கணக்கில் பணம் நிரப்புவது மூலம் மெடிஷீல்டு லைஃப் சந்தாக் கட்டணங்களுக்குக் கழிவுகள்

- எல்லா முன்னோடிகளுக்கும் (2015-ன் பிற்பகுதி)
  - 2014-ல் 80 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதினர்: இவர்களுக்கான சந்தாக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்படும்
  - தற்போது மெடிஷீல்டு திட்டத்தில் உள்ள 65 முதல் 79 வயதானவர்கள்: தற்போதைய சந்தாக் கட்டணங்களில் பாதியைச் செலுத்தினால் போதும்

MINISTRY OF HEALTH
SINGAPORE

17 மே 2014ல் புதுப்பிக்கப்பட்டது